# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், *இந்திய நாட்டினை* [1] [இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் *அமைந்ததொரு* குடியரசாக நிறுவவும்],

*அதன் குடிமக்கள் அனைவரும்*

*சமுதாய, பொருளியல், அரசியல்* நீதி,

*எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,*

*சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில்* தன்னுரிமை,

*சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில்* சமன்மை

*ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,*

*அவர்கள் அனைவரிடையேயும்*

*தனி மனிதனின் மாண்பு,* [2] [*நாட்டுமக்களின் ஒற்றுமை,*

*ஒருமைப்பாடு*] *இவற்றை உறுதிப்படுத்தும்*

உடன்பிறப்புரிமையினை *வளர்க்கவும்*

*உள்ளார்ந்த உறுதியுடையராய்,*

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 *நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று*, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

---

1. “இறையாண்மையும் மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக” என்பதற்கு, அரசமைப்புச் (நாற்பத்து இரண்டாம் திருத்தம்) சட்டம், 1976 இன் 2 ஆம் பிரிவினால் (3–1–1977 முதல் செல்திறம் பெறுமாறு), மாற்றாக அமைக்கப்பட்டது.
2. “நாட்டுமக்களின் ஒற்றுமை” என்பதற்கு, *மேற்படிச் சட்டத்தினால்* (3–1–1977 முதல் செல்திறம் பெறுமாறு), மாற்றாக அமைக்கப்பட்டது.